# விசுவாசித்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகின்றது?

பிலிப்பியச் சிறை அதிகாரியும் அவரது வீட்டாரும் மனம் மாறிய நிகழ்ச்சியானது இரட்சிக்கப்படுவதற்கான ஒரே வழியின் தகவல் தரும், ஏவப்படும் மற்றும் அதிகாரத்துவம் மிகுந்த எடுத்துக்காட்டாக உள்ளது. அடிக்கப்பட்டுக் குருதி புரண்டோடுவது மட்டுமின்றி இரத்தம் சொட்டிக் கொண்டும் இருக்கும் முதுகைக் கொண்ட, அடிபட்ட இரு கைதிகளின் மேல் இந்த இருதய கடினமுள்ள சிறையதிகாரி சற்றும் மென்மையான உணர்வு கொண்டிருந்ததில்லை. மனித தன்மையுடனிருப்பது பற்றி அக்கறையற்ற அந்தச் சிறையதிகாரி ஒரே ஒரு விஷயத்தை மட்டும் தன் மனதில் கொண்டிருந்தான்: அவனது மேலதிகாரிகள் கூடுதல் பாதுகாப்பைக் கட்டளையிட்டிருந்தார்கள். இதன் விளைவாக, அவன் பவுலையும் சீலாவையும் உட்காவலறையில் இட்டது மட்டுமின்றி, அவர்களின் கால்களைத் தொழு மரத்தில் மாட்டி வைத்தும் இருந்தான்.

சிறையதிகாரி ஒரு பூமியதிர்ச்சியினால் - சிறைக் கைதிகளின் விலங்குகள் உடைபட்டு சிறைக்கதவுகள் திறவுண்டுபோகும்படியான அளவுக்கு ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் - தனது உறக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுப்பப்பட்டான். ஒருவரும் தப்பிச் செல்லாதிருந்தனர் என்று அவன் அறிந்த பொழுது, அதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அடிபட்டு தன்னால் தொழுவில் மாட்டப்பட்டிருந்த அந்த இருவருடன் மேலான வல்லமையுள்ள ஒருவர், இந்த உலகத்திற்குப் பொறுப்பாளியான ஒருவர், இருந்ததை அவன் திடீரெனப் புரிந்து, அறிந்து கொண்டான். இவர்கள் வாய்ப்பு ஒன்றைப் பெற்றிருந்தும் சிறையில் இருந்து தப்பிச் செல்லாத மனிதர்களாய் இருந்தனர்! குற்றமுள்ள சிறைக் கைதிகள் கூட ஓடிச் செல்லாதபடிக்குக் காணப்படாத சக்தியொன்று காரணமாயிருந்தது! உலகத்தின் மிகப் பெரிய வல்லமையொன்று அடிபட்ட அந்த இரு கைதிகளின் பாகமாய் வடிவெடுத்திருந்தது என்பது தெளிவாய் இருந்தது! பயம் மிகுந்தவராய் அந்தச் சிறையதிகாரி காணப்படாத அந்த வல்லமை தன்னுடனும் இருக்க வேண்டுமென்று விரும்பினார்! அவர் தாம் முன்பு புறக்கணித்திருந்த அம்மனிதர்களுக்கு மரியாதையளிக்கத் தயாராக இருந்தார். அவர்கள் உலகத்தின் அந்த மகா பெரிய வல்லமைக்காகப் பேசுபவர்கள் என்பதை அவர் உணர்ந் தறிந்தார்! அங்கு நடந்திருந்தது, அந்த மனிதர்களின் வார்த்தைகளுக்கு எதிர் நிற்க முடியாது என்று சிறை யதிகாரியை நம்பி இணங்கச் செய்திருந்தன. அவர்கள் கட்டளையிடுகின்ற எதையும் அவர் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருந்தார். பயத்துடன்

*நடுங்கியிருந்த அவர், உலகத்தின் அதிகாரியிடமிருந்து அப்படிப்பட்டதொரு (உபத்திர) உத்தரவைப் பெற்றிருந்த அந்த இருவர் முன்பாகக் கீழே விழுந்து பணிந்தார். பிறகு, அவர்களைச் சிறையிலிருந்து வெளியில் அழைத்துக் கொண்டு வந்து அவர், "ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று வியப்புற்றார்.*

*இரட்சிக்கப்படுதல்? அவர் அர்த்தப்படுத்தியது என்ன? பூமியதிர்ச்சியினால் உண்டாகும் மரணத்திலிருந்து விடுதலையாக்கப்படுதலோ? அதுவே அவரது சிந்தையில் இருந்தது என்றால், பவுல் கிறிஸ்துவுக்குள் உண்டாயிருக்கும் விடுதலையை நோக்கி அவரது சிந்தையைத் திருப்பினார். கிறிஸ்து பூமியதிர்ச்சியில் இருந்து ஒரு இரட்சிப்பை வாக்குத்தத்தம் செய்திருக்கவில்லை. இயேசுவின் இரட்சிப்பானது இரு மடங்கானதாக உள்ளது: (1) பாவத்தின் குற்ற உணர்வில் இருந்து விடுதலை (மத். 26:28; லூக். 19:10; யோவா. 8:24; அப். 22:16) மற்றும் (2) "வரப் போகிற கோபாக்கினை"(1 தெச. 1:10; இவற்றை காணவும். மத். 25:41; மாற். 9:47, 48)யாகிய நரகத்திலிருந்து விடுதலை.*

*சிறையதிகாரியின் "இரட்சிக்கப்படுவதற்கு" என்ற செயல்பாட்டு வினைத் தொடர்ச் சொற்றொடரில் ஒரு முக்கியமான சத்தியமானது வெளிப்படுத்தப்படுகின்றது. பாவியொருவர் தம்மைத் தாமே இரட்சித்துக் கொள்ள முடியாது, ஆனால் தமக்குப் புறம்பே உள்ள ஒருவரை முற்றிலுமாகச் சார்ந்திருக்கின்றார். ஒரு மனிதர் தமது சொந்த ஒழுக்க ரீதியான செயல்களால் தம்மை இரட்சித்துக் கொள்ள முடிந்ததென்றால், அவருக்கு இயேசு தேவைப்படமாட்டார். அவர் கிறிஸ்துவிடம், "நீர் எனக்காக மரித்தது நல்லதே, ஆனால் எனக்கு அப்படிப்பட்டதொரு பலி தேவையில்லை" என்று கூற முடிந்திருக்கும். உண்மையில், எந்த ஒரு மனிதரும் தனது ஒரு பாவத்தின் குற்றத்திலிருந்து தன்னையே விலக்கிக் கொள்ள முடியாது. தேவன் மட்டுமே, "நீ மன்னிக்கப்பட்டாய்" என்று கூற முடியும். எனவே இரட்சிப்பு தனக்கு அப்பாற்பட்டதாயிருந்ததை உணர்ந்த சிறையதிகாரி அவ்விஷயத்தைத் தாழ்மையோடும் தக்க விதத்திலும் அணுகினார்.*

*இதற்கு மாறாக, அவர் "செய்ய" என்ற வார்த்தையைப் பயன்படுத்திய பொழுதும் ஒரு மாபெரும் சத்தியத்தை வெளிப்படுத்தினார். முற்றாகப் பார்க்கையில் பாவியொருவர் தனது இரட்சிப்புக்குத் தகுதியாகும் வகையில் ஒன்றும் செய்ய முடியாதென்றாலும் (எபே. 2:8, 9), தம்முடைய சித்தத்தை "செய்பவர்களை" (மத். 7:21) தமக்குக் கீழ்ப்படிபவர்களை (எபி. 5:9) மட்டுமே மீட்பர் மீட்கின்றார். சரியான வகையில் தகவல் தெரிவிக்கப்பட்ட பாவியானவர் கட்டளைகளைக் காத்துக் கொள்வதில் கர்வப்படுவதில்லை (லூக். 17:10). அவர், தாம் தமது சொந்த தகுதியினால் அல்ல, ஆனால் கிருபையினால் இரட்சிக்கப்பட்ட ஒரு பாவி என்பதை எல்லா வேளைகளிலும் அறிகின்றார். அவர் இரட்சிப்பை ஈட்ட முடியாது (ரோமர் 4:4, 5; எபே. 2:8, 9).*

*சிறையதிகாரி, "நான்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தும் போது, குறிப்பிடத்தக்க இன்னொரு சத்தியமானது தெளிவாக விளக்கப்பட்டது.*

‘‘நான்’’ என்ற சிறப்புப் பெயர்ச் சொல்லானது, இதைக் கேட்டவர், இரட்சிக்கப்படுவதற்கு ஆபேலோ அல்லது ஆபிரகாமோ அல்லது மோசேயோ அல்லது சிலுவையில் தொங்கிய கள்ளனோ என்ன செய்தனர் என்று கேட்கவில்லை என்பதை மறைமுகமாக உணர்த்துகின்றது. “நான்” என்ற வார்த்தையானது, ஒருவர், ‘‘இன்றைய நாளில் - பிதாக்களின் யுகத்திலோ, யூதத்துவத்திலோ, யோவான் ஸ்நானனின் நாட்களிலோ, கிறிஸ்துவின் தனிப்பட்ட ஊழிய நாட்களிலோ அல்ல, ஆனால் இப்பொழுது, எனது காலத்தில் - பாவியொருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று நான் அறிய விரும்புகின்றேன்” என்று கூறுவதை மறைமுகமாய் உணர்த்துகின்றது. இப்படிப்பட்ட ஒரு வார்த்தையானது, “நான், தேவபக்தியுள்ள ஒரு தாயானவள் நான் ஒரு குழந்தையாய் இருந்த பொழுது எனக்குத் தெளித்தல் தந்ததைச் சார்ந்திருக்கவில்லை, அல்லது நான் இறந்த பிறகு எனக்காக எனது உறவினரோ அல்லது நண்பரோ ஞானஸ்நானம் பெறுவதை அல்லது திருப்பலி நிறைவேற்றுவதைச் சார்ந்திருக்கவில்லை. நான் என்ன செய்கின்றேனோ அதை மாத்திரம் நான் சார்ந்திருக்கப் போகின்றேன்” என்பதை விளக்கப்படுத்துகின்றது. “நான்” என்பது காரியத்தை மிகவும் தனிப்பட்டதாக்குகின்றது.

‘‘வேண்டும்’’ என்ற வார்த்தையைச் சிறையதிகாரி பயன்படுத்திய தானது, அவர் - அசைக்கப்பட்ட, நள்ளிரவில் அச்சமுற்ற ஒரு மனிதராயிருந்து - இரட்சிப்புக்காகத் தமக்கு முன் திறக்கப்பட்டிருந்த தேர்வுகளையோ அல்லது பரிந்துரைகளையோ கேட்க விரும்பியதில்லை என்பதன் மறைமுக உணர்த்துதலாக உள்ளது. அவசியமானது எதுவோ, செய்ய “வேண்டியது” எதுவோ அதை மட்டுமே அவர் கேட்க விரும்பினார். “என்ன” என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தியதானது “வேண்டும்” என்ற மறைமுக உணர்த்துதலின் தொடர்ச்சியாய் உள்ளது: உண்மையில் அவர், “அவசியமானவைகளைப் பற்றிய திட்டவரையறைகளை எனக்குக் கொடுங்கள் - ஒன்று, இரண்டு, மூன்று என்று - அவற்றை அட்டவணைப் படுத்தி உச்சரியுங்கள்” என்று கூறினார். அவப் பொதுமையானவைகளை விரும்பவில்லை; பிரசங்கியார்கள் காரியத்தைச் சுட்டிக்காட்டும்படி அவர் விரும்பினார். முழுவதுமாய்ப் பார்க்கையில் என்ன ஒரு மதிநுட்பமான கேள்வியை அவர் கேட்டார்! ஒவ்வொரு வார்த்தையும் குறிப்பிடத்தக்க தாயிருந்தது.

“கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி” என்பதே பிரசங்கியார் களின் நேரடியான இரு பொருள்படாத பதிலாய் இருந்தது. இதை அவர்கள் பிரசங்கம் தொடங்குமுன் சுருக்கமாக, உண்மையில் விஷயம் முழுவதும் அடங்கும் வகையில் கூறினார்கள் (அப். 16:32). அவர்கள் நான்கு வார்த்தைகளில் கூறிய விஷயமானது தொடர்ந்து நடக்கப்போகும் எல்லா வற்றுக்கும் சுருக்க உரையாய் இருந்தது. சிறையதிகாரி, “இயேசு” என்ற பெயரை, உண்மையான தேவனுடைய பெயரைக்கூடக் கேட்டிருக்க மாட்டார் என்பதே பொருத்தமான கருத்தாகும். அவர் பெற்ற இந்தப் பதிலானது நிச்சயமாகவே அவரைத் திகைப்படையச் செய்து, “இந்தக் கர்த்த ராகிய இயேசு யார்?” என்று கேட்க விட்டிருக்கும். இதன் விளைவாக,

சிறையதிகாரி கேட்ட திட்டவட்டமான குறிப்புகளடங்கிய "கர்த்தருடைய வசனம்" முழுமையாக மற்றும் விரிவாகத் தொடர்ந்து போதிக்கப்பட்டது.

இரட்சிப்பு என்பது கிறிஸ்துவால் மட்டுமே செயல் விளைவிக்கப்பட வேண்டியதாய் உள்ளது (யோவா. 14:6; அப். 4:12), அவரே ஒரு பாவிக்குத் தேவைப்படுகின்ற "எல்லாமுமாக" (கொலோ. 3:11; 1 கொரி. 1:30ஐக் காணவும்) இருக்கின்றார், அவரே எல்லாவற்றையும் "நிறைவாக்குகிறவர்" (கொலோ. 2:10) என்பதைச் சிலர் புரிந்து கொள்கின்றனர். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி" என்ற கட்டளையானது எதையும் விட்டு விடுவதில்லை ஏனெனில் அந்தக் கட்டளையானது ஒருவர் கிறிஸ்தவரா வதற்கு அவசியமான ஒவ்வொன்றையும் உள்ளடக்குகின்றது என்று அவர்கள் கூறுகின்றனர். இருப்பினும், பஞ்சு ஒன்றிலிருந்து தண்ணீரைப் பிழிந்தெடுப்பது போல ஒருவர், ''விசுவாசம்'' என்ற பதத்திலிருந்து பிழிந்தெடுக்க முடியாது. அப்படிப்பட்ட செயல்முறையானது "விசுவாசம் மட்டும்'' என்பதை விட்டுச் செல்கின்றது என்று கற்பனை செய்து கொள்வதானது அப். 16:31ன் ஏவப்பட்ட பிரசங்கியார்களையும், புதிய ஏற்பாடு முழுவதையும் கூடத் தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்துதலாக உள்ளது. "விசுவாசம் மட்டும்" எவரொருவரையும் இரட்சிக்க முடியாது (யாக். 2:19, 24; யோவா. 12:42ஐக் காணவும்).

ஆயிரக்கணக்கான பார்வையாளர்களுக்கு முன்பு நடைபெற்ற மதரீதியான கலந்துரையாடல் ஒன்றில், ''விசுவாசம் மட்டும்'' என்ற கொள்கையைக் கொண்ட ஒரு பிரசங்கியார், "... விசுவாசி, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்" என்ற வசனத்தை மேற்கோள் காட்டிவிட்டு பிறகு, "அதில் ஒரு துளி தண்ணீர் கூட இல்லை, அதில் ஒரு துளி தண்ணீர் கூட இல்லை'' என்று புலம்பத் தொடங்கி விட்டார். இவ்விதமாக அவர் ஞானஸ்நானத்தைக் கேலி செய்ய முயற்சித்தார். அவருக்கு எதிர்ப்பாளரா யிருந்தவர், "அதில் மனந்திரும்புதல் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை அதில் மனந்திரும்புதல் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை" என்று சொல்லி, அவரது தவறைக் காட்டினார். "விசுவாசம் மட்டும்" போதும் என்கிற பிரசங்கி யாரின் தர்க்கத்தின்படி ஒருவர் மனந்திரும்புதலின்றியே இரட்சிக்கப்பட முடியும் என்றாகின்றது. "விசுவாசம் மட்டும்" போதும் என்ற பிரசங்கியார் மனந்திரும்புதல் அவசியம் என்று உண்மையில் போதித்ததால், கேட்டவர் கள், அவர் எவ்வளவு சீரற்றவராகவும், ஞானஸ்நானத்திற்கு எதிராக எவ்வளவு தப்பெண்ணம் கொண்டவராகவும் இருந்தார் என்பதைக் காண முடிந்தது.

நடபடிகளில், ஏவப்பட்ட பிரசங்கியார்கள் சிறைச்சாலையதிகாரிக்கும் அவரது வீட்டாருக்கும் ''கர்த்தருடைய வசனத்தின்'' விபரங்களை விரித்துரைக்கத் தொடங்கி, இயேசுவின்மீது நம்பிக்கை கொள்வதை மட்டுமின்றி மனந்திரும்புதலையும் ஞானஸ்நானத்தையும் குறித்தும் போதித்தனர். சிறையதிகாரி, தேவனுடைய மனிதர்களின் காயங்களைக் கழுவி அவர்களுக்குப் பணிவிடை செய்தது அவருடைய மனந்திரும்பு தலைக் காட்டுகின்றது. மற்றும், இவ்வசனப் பகுதியானது நள்ளிரவில், அவர் ஞானஸ்நானம் பெற்றதைக் கூறுகின்றது. முழுவதையும் கண்ட பிறகு

ஒருவர் மீண்டும், ‘‘கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி’’ என்ற சுருக்கமான முதல் பதிலுக்குத் திரும்பச் சென்று, ‘‘விசுவாசம்’’ என்ற வார்த்தையானது ஒரு விசாலமான வார்த்தையாக, ஒரு பொருட் செறிவான வார்த்தையாக, விசுவாசம்/நம்பிக்கை, மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய மூன்று கூறுகளையாவது குறைந்தபட்சம் கொண்டுள்ள ஒரு வார்த்தையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது[1] என்பதைக் காண முடியும். மீண்டும், “விசுவாசம்” என்ற எளிய கட்டளையின் மூலம் அந்தப் பிரசங்கியார்கள் எதை அர்த்தப்படுத்தினர் என்று ஒருவர் புரிந்து கொண்டால், பின்பு அவர், அவர்கள் எல்லாவற்றையும் அந்த ஒரு வார்த்தையில் கூறினார்கள் என்பதைப் புரிந்து கொள்கின்றார்.

ஞானஸ்நானத்திற்குத் தெளித்தலை ஆதரிப்பவர்கள் சிலவேளைகளில், அச்சிறையதிகாரி சிறையில் ஞானஸ்நானம் பெற்றார், ஆகையால் முழுகுதல் பெற்றிருக்க முடியாது என்று உறுதியாய்க் கூறுகின்றனர். இருப்பினும், வசன ரீதியாகக் காண்கையில், சிறை வீட்டில் ஞானஸ்நானம் எதுவுமில்லை; ஏனெனில் பிரசங்கியார்கள் ‘‘வெளியே’’ (அப். 16:30) கொண்டு வரப் பட்டனர். பிரசங்கம் பிரசங்கிக்கப்பட்டது, ஞானஸ்நானங்கள் கொடுக்கப் பட்டன, மற்றும் பிறகு பிரசங்கியார்கள் சிறையதிகாரியின் “வீட்டிற்கு” கூட்டிக் கொண்டு போகப்பட்டனர் (அப். 16:34). சிறையறைக்கும் சிறையதிகாரியின் வீட்டிற்கும் இடையில் ஏதோ ஓரிடத்தில் ஞானஸ்நானம் நடைபெற்றிருக்க வேண்டும், இது தெளித்தலை நியாயப்படுத்த ஒன்றுமில்லை என்று ஆலோசனை அளிக்கின்றது.

இன்றைய நாட்களில் சிலர், ‘‘நாங்கள் முழுக்குதலினாலேயே ஞானஸ்நானம் கொடுக்கின்றோம்” என்று கூறி, அதன் மூலம் சத்தியத்துடன் உடன்பாடு காண விரைகின்றனர். இது போலவே ஒருவர், ‘‘அசை போடுவதினால் நாங்கள் மெல்லுகிறோம்” அல்லது “இதழ் கவ்வுதலினால் நாங்கள் முத்தமிடுகின்றோம்” என்று கூடக் கூற முடியும். முழுக்காட்டுதல் தவிர ஞானஸ்நானத்திற்கு வேறு வழியே இல்லை. “முழுக்குதலினாலேயே நாங்கள் ஞானஸ்நானம் கொடுக்கின்றோம்” என்று கூறுவது, ஞானஸ்நானப் படுத்த ஒன்றிற்கு மேற்பட்ட வழிகள் உள்ளன என்று மறைமுகமாய்க் கூறுவதாக உள்ளது.

மேலும் சிலர், ஞானஸ்நான ‘‘முறைமை’’ பற்றிப் பேசுகின்றனர், ஆனால் வேதாகமமானது முறைமை எதையும் கொடுப்பதில்லை. நகைச்சுவையாகக் கூறுவதென்றால், KJVயின் அப். 16:33ன் “நேர் வழியை” ஒருவர் பயன்படுத்துவதன் மூலம் செங்குத்து முறையை ஒருவர் “நிரூபிக்க” முடியும். இருப்பினும் “உடனே” என்பது அங்கு அர்த்தமாக உள்ளது; அந்த வசனமானது, ஒரு உடல் நீருக்குள் எந்த முறைமையில் வைக்கப்பட்டது என்று கூறுவதில்லை. பல்வேறு முறைமைகள் (பின்புறமாக, முன்புறமாக, நேராக கீழ் அமிழ்த்துதல்) ஞானஸ்நானத்தில் பயன்படுத்தப்படலாம், ஆனால் ஏதொன்றும் குறிப்பாகக் கூறப்படவில்லை. எந்த முறைமையைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்குத் தேவன் எவ்வித சட்டக் கோட்பாட்டையும் ஏற்படுத்தவில்லை; ஞானஸ்நானம் - முழுகுதல் என்ற விஷயத்தை மட்டுமே அவர் சட்டக் கோட்பாடாக்கியுள்ளார்.

தெளிப்பவர்கள், சில வேளைகளில் சிறையதிகாரியின் குடும்பம் முழுவதும் ஞானஸ்நானம் பெற்றனர் என்ற கருத்தைப் பற்றிக் கொண்டு, அதில் சில குழந்தைகளும் இருந்திருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இருப்பினும், வசனமானது, அவரது குடும்பத்தில் இருந்த யாவரும் பிரசங்கத்தைக் கவனிக்குமளவுக்கு வயது வந்தவர்களாயிருந்தனர் (16:32) என்று காண்பிக்கின்றது, மற்றும் அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு சந்தோஷப்பட முடிந்தது (16:34). இந்த வசனத்தை ஆராய்ந்த பிறகு, இந்த எடுத்துரைப்பானது சிறு குழந்தைகளின் ஞானஸ்நானத்தை உள்ளடக்க வில்லை என்று ஒருவர் முடிவு செய்வார்.

சிறையதிகாரி மனமாற்ற விபரமானது ஞானஸ்நானம் பற்றிய மற்ற இரு மாபெரும் சத்தியங்களைக் காண்பிக்கின்றது. முதலாவதாக ஞானஸ்நானம் செயல்பாடு முடியும் வரையிலும் பதட்டமும் பரபரப்பும் இருந்தது. அதன் பிறகு மட்டுமே சிறையதிகாரியும் அவரது குடும்பத்தாரும் ஓய்வெடுக்க, சந்தோஷப்பட மற்றும் நள்ளிரவு உணவு ஒன்றை உண்ணத் தயாராயினர். நடபடிகள் புத்தகத்தில், பாவியொருவர் இயேசுவில் விசுவாசம் கொண்ட பிறகு, தாம் ஞானஸ்நானம் பெறும் வரையிலும் உணவு உண்டதாகவோ, பானம் அருந்தியதாகவோ எந்தப் பதிவும் இல்லை. இரண்டாவதாக, ஞானஸ்நானம் பெறுதல் தாமதப்படுத்தப்படாமல் நள்ளிரவிலேயே செய்யப்பட்ட உண்மையானது அதன் முக்கியத்துவத்தைத் தெரிவிக்கின்றது. இது புதிய ஏற்பாட்டுப் பிரசங்கத்தின் அவசரத் தன்மையைக் காண்பிக்கின்றது. ஒரு விசேஷ நிகழ்ச்சி வரையிலுமோ அல்லது காலை வெளிச்சம் வரையிலும் கூடவோ ஞானஸ்நானத்தைத் தள்ளிப் போடுதல் என்பது அவ்வளவு தூரம் இரட்சிப்பை ஒத்திப் போடுதல் என்பதாகி விடுகின்றது.

---

குறிப்பு

[1]இது அப். 16:31க்குப் பொருந்தும், ஆனால் "விசுவாசம்" என்ற வார்த்தை வருகின்ற எல்லா வசனங்களுக்கும் இது பொருந்தாது. எடுத்துக்காட்டாக, யாக். 2:19, "பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன" என்று கூறுகின்றது; ஆனால் பிசாசுகளின் விசுவாசமானது தேவனுக்குக் கீழ்ப்படிதலின் எந்த வடிவத்துடனும் உள்ளடங்குவதில்லை.